
# சுட்டி

ஜூன் '86
60 காசு
மாத இதழ்




FREE E - BOOKS , www.thamizham.net.,

# கவர்ச்சியற்ற இந்திய மருத்துவம்

சித்த, ஆரிய, யூனானி ஆகிய இந்திய மருத்துவத் துறைகளை வளர்க்க அரசு பெரும் முயற்சி செய்து வருகிறது. பெரும் கட்டடங்கள், ஆராய்ச்சி மையங்கள், மூலிகைப் பண்ணைகள், கண்காட்சிகள், கருத்தரங்குகளை நடத்துவதுடன் பத்திரிகைகளில் கட்டுரைகளும் வெளியாகின்றன. இருப்பினும் ஆங்கில மருத்துவர்களையும் மருத்தகங்களையும் மக்கள் நாடிச் செய்லுமளவு இவற்றை நாடுவதில்லை.

இந்த நாட்டு மருத்துவர்களை நாடிச் செல்பவர்கள் இரு பிரிவினர். ஒன்று ஏழ்மை காரணமாக இலவச மருத்துவப் பரிசோதனைக்காக செல்பவர்கள். மற்றொரு பிரிவினர் இந்திய மருந்துவ முறையின் சிறப்புப்பற்றி அறிந்து அதில் நம்பிக்கையுடன் செல்பவர்கள்.

ஏனைய மக்கள் எம். பி. பி. எஸ் படித்த ஆங்கில மருத்துவரைப் போல இந்த நாட்டு மருத்துவரின் கல்வித் தகுதி, அனுபவம் என்ன, ஆங்கில மருந்துகளைப் போல இம்மருந்துகளை எளிதாக சாப்பிட இயலுமா, ஆங்கில மருந்துகள் போல இவற்றுக்கும்தயாரிப்பு நாள் (Manufacturing date) உபயோக முடிவுநாள் (Expiary date) உண்டா? ஆபத்தான கட்டங்களில் இந்நாட்டு மருந்துகள் உயிர்காக்க உடனே செயல்படுமா? இவை போன்ற அச்சங்களாலும் அறியாமையாலும் இந்த மருத்துவத்துறைகளை ஆதரிப்பதில்லை.

இந்த மருத்துவமனைகளில் போதுமான சுகாதாரமின்மையும் இவற்றின் வளர்ச்சியின்மைக்கு காரணமாகின்றது. உதாரணமாக அண்ணா நகரிலுள்ள அண்ணா மருத்துவமனையில் பஸ்பங்களை அழுக்கான துண்டுக் காகிதத்தில் மடித்துத் தருகின்றனர். விலைகுறைந்த சுத்தமான பிளாஸ்டிக் பைகளில் போட்டுத் தரக்கூடாதா? இந்த மருத்துவமனை வாசலிலிருந்து ஏழைகள் மருந்துக்காக வாங்கி வரும் பாட்டில்களின் தூய்மையைப் பரிசோதிக்காமலேயே மருந்துகள் வழங்கப்படுகின்றன!

இந்திய மருத்துவ முறைகள் பற்றி மக்களிடம் பரவியுள்ள அறியாமை, அச்சம், சுகாதாரமின்மை இவற்றை நிவர்த்தி செய்வதில் அரசு ஆர்வம் காட்டினால் இந்திய மருத்துவம் மக்களை அதிகமாகக் கவரும்.

—கேபப்பூண

FREE E - BOOKS , www.thamizham.net.,



நான் 'வீடு விளையாட்டு' விளையாடுகிறேன் என்றா நினைத்தீர்கள்! என் நிஜ வீடே இது தான்!

FREE E - BOOKS , www.thamizham.net.,



பொதுக் கழிப்பிடங்களை அரசு ஏற்படுத்தியும் இன்னும் சாலையோரங்களில் அசுத்தம் குறையவில்லை. அவசர நேரத்தில் பொதுக் கழிப்பிடத்தை நாடிச் செல்வதை விட சாலையோரத்தைக் கழிப்பிடமாக்கி விடுவதே பொது மக்களுக்கு எளிதாக இருக்கிறது.

பொது மக்களுக்கு எளிதாகவும் அதே சமயம் சாலைகளின் தூய்மை கெடாமலும் இருக்க ஒவ்வொரு கடையிலும் கழிவறை கட்டாயமாக்கப்பட வேண்டும். சுத்தமாக வைக்கப்பட வேண்டும். பொதுமக்கள் அக்கழிவறைகளை அவசர காலத்தில் உபயோகிக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

நாற்சந்திகளில் பூங்காக்களை ஏற்படுத்தி பராமரித்து வரும் வங்கிகள் தமது அலுவலகங்களிலேயே பொதுமக்களும் பயன்படுத்தும் வகையில் கழிவறைகளை கட்டிப் பராமரிக்க இயலாதா?

மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் கடையில் கழிவறை கட்டப்பட்டிருந்தால் தான், பொது மக்களையும் இலவசமாகக் கழிவறையை உபயோகிக்க அனுமதித்தால் தான் லைசென்சே வழங்கப்படுகிறது. இதனால் சிறு குழந்தை கூட சாலைகளை அசுத்தப்படுத்துவதில்லை. கழிவறைகளை உபயோகிக்கும் முறை பற்றி சிறு குழந்தைக்குக் கூட தெரிந்திருப்பதால் பொது மக்களை தம் கழிவறைகளுக்கு அனுமதிப்பதில் கடைக்காரர்கள் தயக்கம் காட்டுவதில்லை.

நமது கடைக்காரர்கள் பலர் இந்தக் கோடை காலத்தில் தவித்த வாய்க்கு தண்ணீர் தந்து உதவுவதில்லையா? அதை தர்மமாகக் கருதுவதில்லையா? அதுபோல அவசர காலங்களில் தமது கழிவறையைப் பொதுமக்கள் பயன்படுத்த அனுமதிப்பது மாபெரும் தர்மமல்லவா? அரசும் கடைக்காரர்களும் இப்புதிய தர்மத்தை சற்று சிந்திக்கட்டும்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# குழந்தைகளைச் சீவும்



# சறுக்கு மரம்

சென்னை அண்ணா நகர் டவர் பூங்கா சிறிது காலத்திற்கு முன் தான் சீரமைக்கப்பட்டு சிறு குளங்கள், குன்று, செயற்கை நீரூற்றுகள், குழந்தைகளுக்கு எம் ஆர். எப். டயர்களாலான விளையாட்டு சாதனங்கள் என்று தோன்றி பொது மக்களை ஓரளவு கவர்ந்து அழைத்தது. எம். ஆர். எப். நிறுவனமும் விளம்பரம் தேடிக் கொண்டது. சினிமாவுக்காக போட்ட செட் போல கொஞ்ச காலம் சினிமா ஷூட்டிங்குகள் இங்கு நடைபெறும் வரை எழிலுடன் விளங்கிய இப்பூங்கா இப்போது பொது மக்களை விரட்டியடிக்கின்றது. டயர்களும் தகரமும் கொண்டு அமைக்கப்பட்ட சறுக்கு மரம் இற்றுப் போய் ஓட்டை விழுந்து குழந்தைகளின் கைகால்களை சீவுவது போல இருக்கிறது. படிகளில் ஏறவே முடியவில்லை. செயற்கை குளங்கள் சில அழுக்குக் குட்டைகளாயும், குப்பைத் தொட்டிகளாகவும் நாற்றமடிக்கின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால் பூங்காக்கள் சீராக இருந்த போது பொழுது போக்க குழந்தைகளுடன் வந்த பொதுமக்கள் இரவு 7 மணிக்கு கட்டாயமாக வெளியே விரட்டப்பட்டனர். இப்போதோ பூங்காவின் நிலைமை தெரியாமல் உள்ளே நுழைபவர்கள் விரைவிலேயே திட்டிக் கொண்டு வெளி வருகிறார்கள்.

இது ஒரு உதாரணம் தான். பெரும்பாலான பூங்காக்களின் கதியும் இதேதான். பொழுது போக்க சினிமாவைக் கட்டிக் கொண்டு அழுவதைத் தவிர இங்கு வேறு வழியே இல்லையா?

—கமலன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வங்கித் தேர்வு முறைகள்

கவனிக்கும் திறன், புரிந்து கொள்ளும் ஆற்றல், அறிவுக் கூர்மை போன்றவற்றை உச்ச கட்டமாக வெளிப்படுத்தக் கூடியவர்களையே தேசிய வங்கிகளின் கம்ப்யூட்டர் தேர்வு முறைகள் தேடிக் கண்டு பிடிக்கின்றனவாம்.

சமூகத்தின் அறிவார்ந்த இந்தப் பகுதியைத் தனக்குரிய தாக்கிக் கொண்டு தேசிய வங்கிகள் நடத்தப் படுகின்றன. (திரை மறைவில் நடக்கும் கொல்லைப் புற செலக்‌ஷன்கள் ஒரு பகுதிதான்.)

இந்த கூர்மையும், ஆற்றலும் உள்ளவர்களையே பெரும் பகுதி நாற்காலிகளில் உட்கார வைப்பதால், நாம் பயனடைகிறோமா? நாடெங்கும் தினம் ஆயிரக்கணக்கான 'கஸ்டமர்கள்' வங்கி ஊழியர்கள் நடந்து கொள்ளும் முறையில் மிகவும் எரிச்சலும் சலிப்பும் அடைந்தே வருகிறார்கள்.

புன்சிரிப்பற்ற வரவேற்பு, அலட்சியப்போக்கு, அசட்டை, வறட்டு பதில்கள், உதவி செய்ய முன் வராத போக்கு போன்ற அவலங்களை பெரும்பாலான வங்கிகளில் சந்தித்தே வருகிறோம்.

மனித நேயமும், சமூக உணர்வும், இனிய தன்மையும் தவிர மற்ற எல்லா மூளைப் பண்புகளும் இருந்தால் யாருக்கு லாபம்?

இத்தகைய உணர்வுடைய இனிய மனிதர்களைத் தேர்ந்தெடுக்க வங்கிகளின் கேள்விப் பட்டியலில், ஒரு கேள்வி கூட இருப்பதில்லை, என்பது மிகவும் வருந்தத்தக்கது.

வங்கி வேலைக்கு மூளைக் கூர்மையை விட, மனிதப் பண்புகளே மிக முக்கியம் என்பதை, அங்குள்ள மனிதக் கம்ப்யூட்டர்களின் மூளையில் உணர்த்துவது எப்படி?

—உலகப்பன்

நன்கொடை என்ற பெயரால் தனியார் பள்ளிகள் அடிக்கும் கொள்ளை ஒரு புறம், இது போதாதென்று பள்ளிகள் பலவும் தங்களிடம் தான் நோட்டுப்புத்தகங்களை அநியாய விலையில் மாணவர்கள் வாங்கியே தீர வேண்டுமென வற்புறுத்துகின்றன. இதில் இவர்கள் பலிகடாவாகும் மாணவர்களை வைத்து சுமார் 100% கொள்ளை லாபம் ஈட்டுகிறார்கள். தட்டி கேட்க பெற்றோர்கள் இயலாத நிலை!

# பள்ளிகளில் நோட்டுப்புத்தகக் கொள்ளை

மாதிரிக்காக: சென்னை அண்ணாநகரில் ஒரு பிரபல பள்ளிக்குச் சென்று கவனித்தோம். 3ஆம் வகுப்பிற்கு ரூ 80/- கட்டாய வசூல் செய்து கீழ்க்கண்ட வற்றை வழங்குகிறார்கள். அவற்றின் உண்மை விலை மொத்த வியாபாரிகளிடம் கேட்டு பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

| எண் | விவரம், எண்ணிக்கை | ஒன்றின் உண்மை விலை | ரூ | பை |
|---|---|---|---|---|
| 1. | 1 குயர் பைண்ட் நோட்டு 2 | ரூ 2 50 | 5 | 00 |
| 2. | 1/2 ,, 4 | ரூ 1 75 | 7 | 00 |
| 3. | 80 பக்கம் (76 பக்கமே இருக்கும்) 4 | ரூ 0' 92 | 3 | 68 |
| 4. | 60 ,, (56 ,, ) 5 | ரூ 0 68 | 3 | 40 |
| 5. | 40 ,, (36 ,, ) 1 | ரூ 0 42 | 0 | 42 |
| 6. | டிராயிங் நோட்டு 40 பக்கம் 1 | ரூ 1 08 | 1 | 08 |
| 7. | பிரௌன் பேப்பர் ஆல்பம் 40 பக்கம் 1 | ரூ 1 10 | 1 | 10 |
| 8. | கலர் பென்சில் செட் 1 | ரூ 9 50 | 9 | 50 |
| 9. | பென்சில் 1 | ரூ 0 65 | 0 | 65 |
| 10. | மர 1' ஸ்கேல் 1 | ரூ 0 92 | 0 | 92 |
| 11. | ரப்பர் 1 | ரூ 0 45 | 0 | 45 |
| 12. | பிரௌன் பேப்பர்கள் 4 தாள் | ரூ 0 83 | 3 | 32 |
| 13. | லேபிள் 25 | ரூ 0 25 | 6 | 25 |
| | | | 42 | 77 |

மொத்த வியாபாரிகளிடம் பள்ளி நிர்வாகம் வாங்கும் போதே இந்த ரேட் தான் வருகிறது. அவர்களே தயாரித்துக் கொண்டால் இதில் மேலும் 10% குறையும். 3ஆம் வகுப்பில் இந்த லாபமென்றால் பெரிய வகுப்புகளில் இன்னும் கூடும். பாடப் புத்தகங்களிலும் அடிக்கும் லாபம் இதில் சேர்க்கப்படவில்லை. 1000 மாணவர்கள் படிக்கும் பள்ளிக்குக் கிடைக்கும் லாபத்தைக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். இது ஒரு சராசரி

FREE E - BOOKS , www.thamizham.net.,

வசூல். இதைவிட அதிகமாக வசூலிக்கும் பள்ளிகளும் நிறைய உண்டு.

நம் முதுகின் மீது இப்படியே இவர்கள் குதிரை ஏறிக் கொண்டே போனால் இனி நாம் நாலுகாலில் நடக்க வேண்டியது தான்!

—ஸ்டெனிஸ்லாஸ்

# இந்தியாவில் வெளிநாட்டு மாணவர்கள்

- ஆண்டுதோறும் இந்தியப் பல்கலைக் கழகங்களில் பயில வரும் அயல்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கை 25,000 இதில் சென்னையில் 3000, பம்பாயில் 2000, கல்கத்தாவில் 1000 பேர்கள் படித்து வருகிறார்கள்.

- ஏழத்தாழ 77 நாட்டு மாணவர்கள் இந்தியாவில் தங்கிப் படித்து வருகிறார்கள்.

- இம்மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கு மாணவியர்.

- பெரும்பகுதி மாணவர்கள் மேற்காசிய ஆப்பிரிக்க நாட்டவர்கள்.

- அமெரிக்கா, ரஷ்யாவிலிருந்து வரும் மாணவர்கள் மிகவும் குறைவு. 1983-84ல் ரஷ்யாவிலிருந்து ஒரே ஒரு மாணவர் தான் வந்தார். கடந்த கல்வி ஆண்டில் 20 முதல் 22 அமெரிக்க மாணவர்கள் ஒரே ஒரு வருடப் படிப்புக்காக இந்தியா வந்தனர்.

- ஜனதா ஆட்சியின்போது டெல்லியில் மட்டும் 2900 வெளிநாட்டு மாணவர்கள் பயின்றனர். இதுவரை இருந்த எண்ணிக்கையில் இதுவே மிகமிக அதிகம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தவிக்க வைக்கும் சமாதி

தமிழகத்தில் ஏனைய தெய்வங்களைப் போல அண்ணாவும் ஒரு தெய்வம். எனவே ஏனைய கோயில்களைப் போல அண்ணா சமாதியும் ஒரு கோயிலாகவே கருதப்படுகிறது தமிழக அரசால். அதனால் தான் சுற்றுப்பயணிகளைக் காலணிகளைக் கழற்றிய பிறகே சமாதிக்கு அனுமதிக்கின்றது. குறிப்பாகப் பகல் 12 மணி கொளுத்தும் வெயிலில் கூடக் காலணிகளைக் கழற்றி விட்டுத்தான் செல்ல வேண்டும்.


சமாதியில் சிவப்புக் கம்பளங்கள் பயணிகளை வரவேற்கின்றன. இல்லையில்லை, பயணிகள் சிவப்புக் கம்பளங்களை நாடி ஓடுகின்றனர். பளபளப்பும், வழவழப்புமான அலங்கார புல்தரை இந்தக் கோடை காலத்தில் விரைவில் சூடேறி பயணிகளின் பாதங்களைப் பதம் பார்த்து விடுகின்றது.

இந்த சமாதிக்குச் செல்லும் பாதையில் நிழல் தரும் மரங்கள் வேண்டாம், குறைந்தபட்சம் புல் கூடவா வளர்க்கக் கூடாது? காலணியின்றி நடந்து செல்லும் பயணிகளுக்கு பாதை உபாதையே தருகிறது.

இங்குள்ள செருப்புக் காவலர்கள் நிச்சயம் அரசு ஊழியர்கள் தான். இல்லாவிட்டால் சிறிதும் இரக்கமின்றி, மனிதாபிமானமின்றி சட்டம் பேசும் அரசு ஊழியர்களைப் போல பகல் 12 மணி அனல் கக்கும் வெயிலில் கூட காலணிகளைக் கழற்றி விட்டுத்தான் செல்ல வேண்டும் என்று அடம் பிடிப்பார்களா? சமாதியில் இருப்பவரைப் போல சமாதிக்கு வருபவர்களுக்கும் எதையும் தாங்கும் இதயம் இருக்கும் என்று இச்செருப்பு காவலர்கள் நினைக்கின்றனர் போலும்?

இந்த கோடைகாலத்தில் பகல் 1 மணிக்குள் அல்லது மாலை 4 மணிக்குப்பின் பார்வையாளர்களை அனுமதிக்க வேண்டும் அல்லது எந்நேரமும் காலணிகளை அணிந்து செல்ல அனுமதிக்க வேண்டும். கட்டாயம் காலணிகளை கழற்றித் தான் செல்ல வேண்டுமென்றால் அரசு புல் பாதைகளையோ அல்லது நிழல்பாதைகளையோ ஏற்படுத்தட்டும். —நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இனி தப்ப 

அயல்நாடுகளில் ஒவ்வொரு குடிமகனுக்கும் அடையாள கார்டு உண்டு. ஒரு குடிமகனைப்பற்றித் தேவையான அனைத்துத் தகவல்களும் கொண்ட இந்த அடையாள அட்டை அரசாங்கம் சீராக திட்டமிடுவதற்கு மிகவும் உதவியானது. ஆனால் இதுபோன்ற ஒரு கார்டு எந்த இந்தியக் குடிமகனிடமும் இதுவரை கிடையாது. இக்குறையை நீக்க அண்மையில் அணு ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானி ஒருவர் ஒரு புதிய முறையைக் கண்டு பிடித்து உள்ளார். உலகில் பல்வேறு நாடுகளில் தற்போது பின்பற்றப் படுகின்ற 22 விதமான முறைகளை விடவும் இம்முறை உயர்ந்ததெனக் கருதப்படுகின்றது.

இம்முறையில் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அவசியமில்லை. ஒவ்வொரு பிரஜைக்கும் 6 ஸ்தானங்கள் கொண்ட 'எண் பெயர்' அளிக்கப்படும். இந்த ஸ்தானங்கள் 128 விதமான குறியீடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுகின்றன. தேவநாகிரி லிபியின் எட்டு உயிரெழுத்துக்கள், 16 மெய்யெழுத்துகளிலிருந்து இந்தக் குறியீடுகளை டாக்டர் டி. என். ஸ்ரீ வத்சவா என்பவர் அமைத்துள்ளார்.

இந்த எண் பெயரின் முதல் 53 ஸ்தானங்கள் ஒரு குடி

---

இனிமையான இசை நாசிக்கு இதமான நறுமணம் உடலுக்கு வெளிப்புற சீதோஷ்ண நிலையைப் பொறுத்து மிதமான சூடு அல்லது குளுமை இவை அத்தனையும் ஏதோ ஒரு நட்சத்திர ஓட்டலில் கிடைக்கிறது

## சூப்பர்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# முடியாது

மகளின் முகவரியையும் 4வது ஸ்தானம் அவனது பாலினம், கைரேகை, உயரம் முதலிய உடற்கூறு விவரங்களையும் 7வது ஸ்தானம் வயதையும் குறிக்கிறது. இதன் 7வது ஸ்தானம் மற்ற ஸ்தானங்களுடன் ஒருவித கணித சூத்திரத்தின்படி இணைந்துள்ளது. இந்த ஸ்தானமே ஒவ்வொருவரையும் பரிசோதிக்க உதவுவது.

இம்முறையின்படி இரு நபர்களுக்கு ஒரே எண்பெயர் வரவே வாய்ப்பில்லையாதலால் மற்றொருவரைப் போல நடிக்கவோ கள்ளக் கையொப்பமிடவோ இயலாது.

நம் நாட்டிலுள்ள 600 கோடி பேர்களுக்கும் இவ்விதம் தனித்தனி 'எண்பெயர்' கொடுக்க இயலும். 128 வருடங்களுக்குப் பிறகே எந்த ஒரு எண்ணும் திரும்ப வரமுடியுமாதலால் இம்முறை நிலையானதும் கூட.

இம்முறை அமுலாக்கப்பட்டால் அனாதைகளாக சிதறிக் கிடக்கும் இந்தியப் பிரஜைகளைப் பற்றி துல்லியமாக அறிந்து சீராக திட்டமிட்டு அரசாங்கம் செயல்பட உதவியாக இருக்கும். சமூகக் குற்றவாளிகளும், ஒற்றர்களும் மிகுந்து வரும் இக்காலத்தில் இம்முறையை விரைந்து செயல்படுத்துவது மிகவும் அவசியமானது.

—ரேவதி

---



என நீங்கள் எண்ணினால் உங்கள் எண்ணம் தவறானது. இந்த சொகுசும் பவுசும் லண்டனில் உள்ள பொது கக்கூசுகளில் கிடைக்கிறது.

'சூப்பர் லு' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த புதுக் கக்கூசுகள் அண்மையில் லண்டனில் பல இடங்

FREE E - BOOKS , www.thamizham.net.,

களில் நிறுவப்பட்டுள்ளது. நடமாடும் வீடுகள் போல் இதைக் கூண்டோடு பெயர்த்து நினைத்த இடத்தில் நிறுவிக் கொள்ளலாம். ஆனால் நிறுவுவதற்கு முன்பு ஒரு பள்ளம் தோண்டி அதன் மீது தான் இதை நிறுவ வேண்டும்.

இந்த கக்கூசின் கதவுகள் எப்போதும் அடைத்தே இருக்கும். பத்து காசு நாணயத்தை இதன் சுவரில் உள்ள துவாரம் வழியாகப்போட்டால் இதன் கதவு தானாகத் திறந்து கொள்ளும். உடனே சிறிதும் தாமதிக்காமல் நாம உள்ளே நுழைந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் தானாகத் திறப்பது போல் இதன் கதவுத் தானாக மூடிக் கொண்டு விடும்.

இதன் உள்ளே பொருத்தப்பட்டுள்ள டேப்ரிக்கார்டர் தொடர்ந்து இசையை ஒலி பரப்பிக் கொண்டும் இருக்கும்.

இரண்டுக்குப் போய் விட்டு இதைச் சுத்தம் செய்யாமல் நம்மால் வெளியே வரமுடியாது. சுத்தம் செய்வதற்கு உரிய பட்டனை அழுத்தினால் தான் கதவு திறக்கும். தொடர்ந்து கழிவுகளைக் கீழே கொட்டிவிட்டு பேசின் நிமிர்ந்ததும், கக்கூசில் உள்ள நீர்க் குழாய்கள் கக்கூசின் மீது தண்ணீரைத் தூவும், கழுவும். இது முடிந்ததும் கக்கூசில் பொருத்தப்பட்டுள்ள காற்றுக் குழாய்கள் காற்றை வெளிப்படுத்திக் கக்கூசை உலர்ந்ததாக மாற்றிவிடும்.

இந்த கக்கூஸ் உள்ளே ஏற்கனவே ஓர் ஆள் இருக்கிறதா இல்லையா என்பதைக் கதவைத் தட்டிப் பார்த்துதான் அறிந்து கொள்ள வேண்டும் என்பது இல்லை. காசு போடும் துவாரத்தில் சிகப்பு விளக்கின் வெளிச்சம் தெரிந்தால், உள்ளே ஆள் இருக்கிறது என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

FREE E - BOOKS , www.thamizham.net.,




✷ இப்போது மத்திய பிரதேசத்தில் உங்கள் வழக்குகள் முடிந்து விட்ட நிலையில் உத்திரப்பிரதேசத்திலுள்ள நீதி மன்றங்களுக்குச் செல்ல அஞ்சுகிறீர்களா?

இல்லை நான் ஏன் அஞ்ச வேண்டும்? நான் ஏதாவது செய்திருந்தால் அதன் விளைவுகளையும் நான்தானே எதிர் நோக்க வேண்டும். காத்திருப்பதும், அரசாங்கத்தின் செலவிலேயே சாப்பிடுவதும் எனக்கு அலுத்து விட்டது. உத்திர பிரதேசத்திற்குச் சென்று என் செயல்களுக்காக நான் அடைய வேண்டியதை அடைய விரும்புகிறேன்.

✷ ஏன் போலீசில் சரணடைந்தோம என்று வருந்துகிறீர்களா?

ஆம். நான் மட்டுமல்ல. சிறையில் அடைத்தபின் மற்ற நடவடிக்கைகள் எடுப்பதில் ஏற்பட்ட தாமதத்தை சகிக்க முடியாமலேயே கன்ஷியாம் மிர்தா தப்பித்து விட்டார். 'ஆமாம் சாமி போட்டுக் கொண்டு அணு அணுவாக சிறையில் சாவதை விட காட்டில் சாவதே மேல்.


**தவறு நேர்ந்து விட்டது வருந்துகிறோம்**

சென்ற இதழில் டானியல் ஜீவா மறைவு செய்தியில் அவரை மல்லிகை இதழோடு தொடர்பு படுத்தித் தவறாக செய்தி வெளியிட்டுள்ளோம். அத்தொடர்பு பற்றிய செய்தி தவறு எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர் குழு

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தலைமைச் செயலகத்தில் பூனைகள்



கல்கத்தாவின் தலைமைச் செயலகத்தில் 250 பூனைகள் வளர்ந்து வருகின்றன. நகரின் மையப் பகுதியிலுள்ள தொன்மை வாய்ந்த'ரைட்டர்ஸ் பில்டிங்' இல் தான் இந்தத் தலைமைச் செயலகம் இயங்கி வருகிறது. மாநில அரசின் 55 துறைகள் இக்கட்டிடத்தில் தான் இயங்குகின்றன. 8000 அரசு ஊழியர்கள் இங்கு வேலை செய்கின்றனர்.

இங்குள்ள அலுவலக அறைகளில் நிறைய கரப்பான் பூச்சிகள், எலிகள், சிலந்திகள், இன்னும் அநேக விதமான பூச்சிகள் வாழ்ந்து வருகின்றன. சில துறைகளைச் சார்ந்த அறைகளில் மட்டும் 8 ஊழியர்களுக்கு 5 பூனைகள் என்ற விகிதத்தில் பூனை இனம் பெருகி வருகிறது. அலுவலகத்தில் போதுமான பேப்பர் வெயிட்டுகள் இன்மையால் பூனைகளைப் பேப்பர் வெயிட்டுகளாகப் பழக்கி வைத்துப் பயன்படுத்துகிறார்கள். போதுமான அலமாரிகள், குப்பைக் கூளங்கள், குண்டூசி மெத்தைகள் ஏன் உட்கார்ந்து வேலை செய்ய நாற்காலிகள் கூட இல்லை.

இதன் தாழ்வாரங்கள் இரவு 10 மணி முதல் காலை வரை 50 பைசாவிலிருந்து ரூ 2 வரை வாடகைக்கு விடப்படுகின்றன. வாடகைக்கு விடுபவர்கள் இக்கட்டிடத்தின் இரவுக்காவலர்கள் தாம். இதிலுள்ள 50 டீக்கடைகள், 40 வெற்றிலை பாக்கு கடைகள் 30 மிட்டாய்க் கடைகளில் பெரும்பாலானவை இங்குள்ள அரசு ஊழியர்களால் நடத்தப்படுபவை.

அமைச்சர்களுக்கும், தலைமைச் செயலர்களுக்கும் 50% ஒதுக்கியது போக எஞ்சியுள்ள 70 அல்லது 75 கழிவறைகளை தினமும் 14,000 முதல் 15,000 பேர்கள் உபயோகிக்க வேண்டி

FREE E - BOOKS , www.thamizham.net.,

யுள்ளது. இங்குள்ள 150 சுத்தி செய்யும் தொழிலாளர்களில் 25 முதல் 30% வரை தினமும் விடுப்பில் சென்று விடுவதால் கழிவறைகளைச் சுத்தம் செய்வது மிகவும் அரிது.

உள்ளாட்சித் துறைக்கு மட்டுமே தினமும் 3000 கடிதங்கள் வருகின்றன. ஆனால் இங்கு இயங்கும் அஞ்சலகத்தில் கடிதம் பிரிக்கும் ஊழியர்களோ இரண்டே பேர்தான்.

10 அமைச்சர்களும், 21 துணை அமைச்சர்களும் இந்தக் கட்டிடத்தின் முன்பகுதியில் வேலை செய்த போதும் தமது துறை சார்ந்த ஊழியர்களின் வேலை வசதிகளைச் செம்மைப் படுத்தவோ அவர்களை மேற்பார்வையிடவோ முற்படுவதில்லை.

நகரின் மையத்தில் அமைந்துள்ளதாலும் பழமைக் கவர்ச்சியாலும், இந்தத் தலைமைச் செயலகம் இங்குள்ள பூனைகளைப் போல இக்கட்டிடத்தை விட்டு வெளியே வர மறுக்கிறது.

# ஹாஜி மஸ்தான் பேட்டியிலிருந்து




✳ பத்திரிகைகள் தான் உங்களைக் 'கள்ளக்கடத்தல்காரர், என்று மக்களுக்கு அறிமுகம் செய்வித்து உங்கள் பெயருக்குக் களங்கம் விளைவித்து விட்டன என்று கூறுகிறீர்களே, அதற்காக அவை மீது நீங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

என் பெயருக்குக் களங்கம் உண்டாக்கிய ஒவ்வொரு பத்திரிகை மீதும் நடவடிக்கை எடுப்பதை வீண் வேலையாகக் கருதுகிறேன். இதைவிட என் வாழ்வில் நான் செய்ய வேண்டிய நல்ல காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன.

✳ அரசியல் கட்சிகளுக்கு எப்போதாவது பண உதவி செய்திருக்கிறீர்களா?

அரசியல் கட்சிகளுக்கு மட்டும் நான் பணம் கொடுத்து உதவியிருந்தால் என்றுமே சிறை சென்றிருக்க மாட்டேன்,

FREE E - BOOKS , www.thamizham.net.,




FREE E - BOOKS , www.thamizham.net.,




FREE E - BOOKS , www.thamizham.net.,

# கல்லறையில் வகுப்பறை

சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியை ஒட்டி அமைந்துள்ள பள்ளி ஒன்றில் எல்.கே.ஜி முதல் 5ம் வகுப்பு வரை உள்ளது. சுமார் 100 குழந்தைகளுக்கு மேல் இதில் படிக்கிறார்கள். ஆனால் இப்பள்ளியில் இருப்பதோ இரண்டே அறைகள். இவற்றில் சில குழந்தைகளே அமர்ந்து படிக்க இயலும். மற்ற குழந்தைகளுக்கு அருகிலுள்ள கல்லறையே வகுப்பறை, கல்லறை நினைவுச் சின்னங்களே குழந்தைகளின் மேசை நாற்காலிகள். ஆசிரியர் மரத்தடியில் நின்று பாடம் நடத்துகிறார். அவ்வப்போது மக்கள் பிணங்களைக் கொண்டு வந்து இங்குப் புதைப்பது இக்குழந்தைகளுக்கு ஆர்வமூட்டி படிப்பிலிருந்து திசை திருப்புகின்றது.

## எமது இந்திய அனுபவங்கள்



"இந்தியாவுக்கு வந்து ஓர் எளிய வாழ்க்கை வாழக் கற்றுக் கொண்டேன். எல்லா இந்தியர்களையும் போல வருகின்ற வாழ்க்கையை வாழக் கற்றுக் கொண்டேன்"— முதுகலை வணிகவியல் பயிலும் 26 வயது எதியோப்பிய நாட்டு மாணவர்.

**வெளி**

"இங்கு கல்லூரி விரிவுரையாளர்கள் மாணவர்களைக் குழந்தைகள் போல நடத்துகிறார்கள். பாடப் புத்தகத்தை மனப்

FREE E - BOOKS , www.thamizham.net.,

பாடம் செய்ய வைப்பதிலேயே அதிக கவனம் செலுத்துகிறார்கள், நூலகங்களும், ஆராய்ச்சிக்கான வசதிகளும் மிகவும் குறைவாக இருப்பது படிப்பதற்கு தடையாக இருக்கிறது" என்கிறார் ஓர் அமெரிக்க மாணவர்.

## நாட்டு

தன்னைப் பற்றிய விவரங்களை வெளியிட விரும்பாத அயல்நாட்டு மாணவர் ஒருவர் கொதிப்புடன் கூறுகிறார் :-
"வெளிநாட்டவன் என்றாலே வாடகை ரூ 2000க்கு குறைவதில்லை. இவ்வளவு வாடகை கொடுத்தும் வீட்டுச் சொந்தக்காரர் தரும் சுகாதார வசதிகள் திடுக்கிடச் செய்கின்றன. இரவு 10 மணிக்குமேல் விளக்குகளை அணைத்து விடுகின்றனர். நாங்கள் என்ன தீய பழக்கங்களுள்ள இழிபிறவிகளா? தங்க இடம் கிடைப்பது மிகவும் அரிதாக இருப்பதால் வேறு வழியின்றி இவற்றைச் சகித்துக் கொள்கிறேன்"

## மாணவர்கள்

"இந்திய மாணவர்களை விட மாணவிகள் எல்லாம் எங்கள் மேல் பரிவுகாட்டிப் படிப்பதற்கு உதவி செய்கிறார்கள். இதனால் நாங்கள் இந்தியப் பெண்களைக் கவர முயலுவதாக நினைத்து எங்கள் மேல் பொறாமைப் பட்டு இந்திய மாணவர்கள் எங்களுக்கு உதவ முன் வருவதில்லை. பொதுவாக இந்திய மாணவர்களிடம் தாழ்வு மனப்பான்மை அதிகம். இந்தியர்கள் நிற வழிபாட்டுக் காரர்கள். இந்திய மாணவர்கள் எங்களை வெறுக்காவிடினும் அவர்கள் எங்களுடன் நட்புறவை விரும்புவதாகச் சொல்ல முடியாது" என்கிறார் ஓர் ஆப்பிரிக்க நாட்டு மாணவர்.

## சொல்கிறார்கள்

சரித்திரம்- சமூகவியல் பயிலும் வெளிநாட்டு மாணவி ஜென்னி கூறுகிறார் :- "எந்த நேரமும் என் கற்புக்கு ஆபத்து வந்து விடுமோ என்றே நான் மிகவும் அஞ்சுகிறேன். எந்த இந்திய ஆண்மகனிடமும் பேசவே பயமாக இருக்கிறது. டெல்லி நகர் பேருந்துகளில் ஏறவே மாட்டேன்."

ஆதாரம் : ப்ரேசப் —ரேவதி

FREE E - BOOKS , www.thamizham.net.,

# எமக்கு வந்தவை

**ஜானகி :** நாவல் (9.50) செ. யோகநாதன் M/s கலைஞன் பதிப்பகம் 10, ஹென்ஸ்மென் ரோடு, தி.நகர், சென்னை-600 017

**கறுப்புச் சூரியன் :** புரட்சிகர ஆப்ரிக்க விடுதலைக் கவிதைகள் (3.00) M/s யாழ் பதிப்பகம், 386, காமராஜர் ரோடு, உப்பிலிபாளையம் கோவை-641 015

**டாக்டர் எட்வர்ட் பாட்ச் மலர் மருந்துகள் மற்றும் மூலிகை யந்திர உபயோகங்கள் :** (3.00) டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி 22, 4வது டிரஸ்ட் கிராஸ், மந்தவெளிப்பாக்கம், (அட்மிரால்டி ஓட்டல் பின்புறம்) சென்னை-600 028

**சிலம்புச் செல்வரின் பல்கலைப் பேருரை :** (12.00) M/s பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர் சென்னை-600 004

**புன்னகைப் பூக்கள் :** கவிதைத் தொகுப்பு (8.00) ப. கா. திலகபாரதி M/s திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயணா ரோடு, தி.நகர் சென்னை-600 017

**விரல் மீட்டா வீணைகள் :** கவிதைத் தொகுப்பு (10.50) பரிமளமுத்து M/s தமிழரசி பதிப்பகம், 10, சல்லிவன்ஸ் கார்டன் லேன் மயிலாப்பூர், சென்னை-600 004

## நூலகத்தில் சாக்கு மூட்டைகளில் புத்தகங்கள்

கொடுங்களூர் அருகே உள்ள அரசினர் கல்லூரியில் உள்ள நூலகத்தில் புத்தகங்களை வைக்கப் போதுமான அலமாரிகளின்றி சாக்குகளில் புத்தகங்களை மூட்டை கட்டி மூலையில் போட்டு வைத்திருக்கின்றார்கள். இந்த நூலகத்தில் 1972க்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் ரூ 5000க்குப் புத்தகம் வாங்குகிறார்கள். ஆனால் அதற்கான அலமாரிகளோ, மேசை நாற்காலிகளோ வாங்குவதில்லை. இக்கல்லூரி ஆசிரியர் பெற்றோர் சங்கம் அவ்வூர் கூட்டுறவு வங்கியிடம் உதவி பெற்று 3 அலமாரிகளைப் பெற்றுத் தந்துள்ளது. இன்றும் ரூ 25,000 மதிப்புள்ள புத்தகங்கள் சாக்கு மூட்டைகளிலேயே கட்டுண்டு கிடக்கின்றன.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

திருமதி. அக்யுனோவின் ராஜாங்கமும் அமெரிக்க பொம்மலாட்டத்தின் ஒரு காட்சி தான் என்பதும் அம்மையாரின் சூத்திர கயிறும் ரீகனின் கையில்தான் என்பதும் மற்றப் பத்திரிகைகள் கண்டு சொல்லாதவை.

—எம். பஷீர், போலக்பூர், ஹைதராபாத்.

சுந்தர ராமசாமியின் பதில்கள் அத்தனையும் அனுபவ ரீதியானவை மட்டுமல்ல. யதார்த்தமானவை.

—இராஜாதி. வண்டலூர், சென்னை-600 018.

அட்டைப்படம் தொழிலாளர்களின் இன்றைய நிலையை மிகவும் அழகாகக் காட்டியுள்ளது.

—A. பழனிசாமி, பொத்தனூர், சேலம்

தமிழ்ப் பத்திரிகைகளில் 'ராசி பலன்' மோகம் பரவ முக்கிய காரணமாயிருந்த தினத்தந்தி குருப் ஆதித்தனாரே இதெல்லாம் 'புருடா' தான் என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார் (''எழுத்தாளர் கையேடு—'' என்ற நூலில்) இதெல்லாம் புரிய வேண்டியவர்களுக்கு இனியாவது புரியுமா?

—எம். பஷீர், போலக்பூர், ஹைதராபாத்.

பிரபலமான வசதி படைத்தவர்களே பாக்கிகள் மலை வைத்திருக்கும் போது பாவம் ஏழைகள் பாக்கி வைக்காமலா வாழ முடியும்?

—இரா. செல்வகுமார், ஒட்டேரி

FREE E - BOOKS , www.thamizham.net.,

## மசாலா பத்திரிகைகளுக்கு

நம் இந்திய ஜனநாயகம், நம்மையும், எண்ணற்ற நாடுகளையும் ஒட்டச் சுரண்டிய பிரிட்டீஷ் பண்பாட்டில் மலர்ந்த ஜனநாயகத்தின் போலி ஆகும். இதன் பீத்தல்களில் மிக முக்கியமானது பத்திரிகைச் சுதந்திரம். இதன் பொருள், உணவு, கல்வி, வேலை, இருப்பிடம் ஆகியவற்றிற்கு வழி வகை அற்ற நிலையிலும் அரசுக்கு எதிராக கத்திக் கொண்டு கிடக்க மனித ஜென்மங்களுக்குச் சுதந்திரம் உண்டு என்பதாகும். லாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அறிவை முற்றாக மழுங்கடிக்கும். இளம் மனங்களில் போலிக் கனவுகளை வளர்க்கும், மன ஆரோக்கியத்தைச் சீரழிக்கும் சரக்குகளைத் தயாரித்து விற்பதும் இங்கு 'பத்திரிகைச் சுதந்திரம்' ஆகும். பாலில் நீரைக் கலந்தால் சிறைவாசம். பத்திரிகையில் விஷத்தைக் கலந்தால் பண்பாட்டுக் களஞ்சியம்!

## சுட்டியின் கேள்விக்கு

உலகெங்கும் பொதுவாக மூன்று வகையான பத்திரிகைகள் உள்ளன.

1. முற்றிலும் தரமான பத்திரிகைகள். ஆழ்ந்த வாசகர்களுக்காக நடத்தப் படுபவை. கருத்துலக மதிப்பீடுகளை உருவாக்கக் கூடியவை. குறைவான வாசகர்களைக் கொண்டிருப்பினும் அரசு, சமூகம், கல்வி நிலையங்கள், கலாச்சாரத் தளங்கள் ஆகியவற்றின் பெரும் மதிப்பை பெற்றுக் கொண்டிருப்பவை.
2. தரமான விஷயங்களோடு, அதிக வாசகர்களைச் சென்றடையும் பொருட்டு ஒரு சில ஜனரஞ்சக விஷயங்களை இணைத்து நடத்தப்படும் பத்திரிகை, மிக அதிகமான வாசகர்களை காலத்திற்கு ஏற்ப வளரத் துணை புரிவதால் சமூக-கல்வி-கலாச்சாரத தளங்களின் கௌரவத்தை இவை பெறுகின்றன.
3. சுத்தமான மசாலா பத்திரிகைகள். அதிக அளவு விற்றா

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சாவுமணி அடிக்கவே முடியாதா?

லும், பெருமளவு வாசகர்களைக கவர்ந்தாலும், வணிக முயற்சியாகக் கருதப்பட்டு, சமூக-கல்வி-கலாச்சாரத் தளங்களால் முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றன.

இந் நிலைதான் பெரும்பாலும் எல்லா மொழிகளிலும் உள்ளன. தமிழ் நீங்கலாக.

தமிழில் முக்கியமான பத்திரிகைகள் அனைத்தும் சுத்தமான மசாலா பத்திரிகைகள் ஆகும். இப்பத்திரிகைகளை சீரழிந்த அரசாங்கமும் சீரழிந்த கல்வி நிலையங்களும் சீரழிந்த வெகு ஜனத் தொடர்பு சாதனங்களும் கௌரவிக்கின்றன. இவற்றுக்கு சரக்கு சப்ளை செய்யும் நம் மூன்றாம் தர எழுத்தாளர்கள்தாம் நம் கலாச்சாரத் தூண்கள்! தரமான ஜனரஞ்சக அம்சங்களும் இணைந்த பத்திரிகைகள் கூட இங்கு தோன்ற முடிவதில்லை. (ஆங்கிலத்தில் 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆஃப் இந்தியா' போல்) மிகத் தரமான பத்திகைகளை சிலர் நடத்திப்

# சுந்தர ராமசாமியின் பதில்

பார்க்கிறார்கள். இவை முன்னூறு பிரதிகள் அச்சேறுகின்றன. ஆயிரம் வாசகர்களைச் சென்றடையத் திணறுகின்றன.

முதலில் நம் ஆசிரியர் சமூகம் விழிப்படைந்து, மாணவர்கள் தரமான எழுத்தையும் தரமற்ற எழுத்தையும் இனங்கண்டு கொள்ள கற்றுத்தர வேண்டும். சிறு பத்திரிகைகள் எண்ணிக்கையில் பெருகி வாசகர்களுக்கு சிறந்த எழுத்தை அளிக்க வேண்டும். ஒவ்வோர் ஊரிலும் வாசகர் சங்கங்கள் தோன்றி தரமற்ற எழுத்தை பகிஷ்கரித்து, அதற்கு எதிரான பிரச்சாரத்தையும் மேற்கொள்ள வேண்டும். இக்குறிக்கோள்களை நிறைவேற்ற அவசியமான இயக்கம் ஒன்றைத் தமிழ் நாட்டில் உருவாக்க வேண்டும். சீரழிந்த அரசியல், சீரழிந்த சினிமா, சீரழிந்த பத்திரிகை இவை ஒரு பெரும் அழுகலின் பகுதிகள் என்பதால் இவற்றுக்கு எதிராகத் தான் இந்த இயக்கத்தை உருவாக்க வேண்டும்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பிக்பாக்கெட்காரனுக்கும் பரிசு

ஒரிஸ்ஸாவின் ஜனதா கட்சித் தலைவர் திரு. பட்நாயக், தமது 100 கி.மீ. பாதயாத்திரையில் சோனிபூர் நகரினுள் நுழைந்து கொண்டிருந்தபோது ஒருவன் அவரை பிக்பாக்கெட் அடிக்க முற்பட்டான். திரு. பட்நாயக்கைத் தொடர்ந்து வந்தவர்கள் அவனைப் பிடித்து அவரிடம் ஒப்படைத்தனர். அவர் அவனுடன் சிறிது நேரம் பேசியபின் தன்னிடமிருந்த ரூ 600ஐயும் அவனிடம் கொடுத்து அனுப்பினார். பிக்பாக்கெட் அடிப்பவனுக்கு நிலையான வருவாய் கிடைக்க வழி செய்து பிக்பாக்கெட் தொழிலை அவன் கைவிடச் செய்வதைவிட ஒருமுறை ரூ 600 கொடுத்து விடுவதே எளிது என திரு. பட்நாயக் நினைத்தார் போலும்.

---

**மெரினா முதல் குமரி வரை மீனவர்கள்**

தொடர் இந்த இதழில் இடம் பெற முடியாமைக்கு வருந்துகிறோம். இதன் தொடர்ச்சி அடுத்த இதழில் இடம் பெறும்.

---

சகல ஜனங்களுக்கும் வயிறு நிறைய உணவு கிடைக்காத ஊரில் செல்வர்கள் எல்லாம் திருடர்; அங்கே குருக்கள் எல்லாம் பொய்யர். பண்டிதர் எல்லாம் மூடர்

—பாரதியார்

---


**வேல் டைப் பௌண்டரி**

- புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்
- எல்லா வித அச்சக உபகரணங்கள்

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை-7. பேசி: 27087


FREE E - BOOKS , www.thamizham.net.,

சிறுகதை

# கணக்கு

ஆசிரியர் அன்று பரீட்சை பேப்பரைக் கொடுத்த போது வாங்கிப் பார்த்து விட்டு தேம்பித் தேம்பி அழுதேன்!

சைபர் மார்க் வாங்கியவர்கள் கூட என்னைப் பார்த்து சிரித்தார்கள். நான் வாங்கியது 98 மார்க். இதுவரை நூறுக்கு குறைந்ததில்லை. இப்போதும் நூறுதான். ஆசிரியரின் கவனக் குறைவில் 2 மார்க் தவறிவிட்டது.

இந்தத் திறமைக்கு பெரிய உத்யோகம் கிடைத்திருக்கும் என்று நினைக்க வேண்டாம். ஒரு தனியார் பல் பொருள் அங்காடியில் எடுபிடி வேலை தான் கிடைத்தது. சளைக்காத உழைப்பில். 'சேல்ஸ்மென்-கம் அக்கௌண்டன்ட் உத்யோகம்.



வருடாந்திர கணக்குகளை எடுத்துக் கொண்டு நானும் முதலாளியும் 'டாக்ஸ்' ஆபீஸ் போனோம்.


'என்னய்யா! கணக்கா இது' என்று அந்த ஆபீஸர் கணக்கு நோட்டை விசிறி அடித்தது என் முகத்தில் காறித் துப்பின மாதிரி இருந்தது. பதிலுக்கு நானும் சீறினேன்..

முதலாளி வெளியே தள்ளிக் கொண்டு வந்து 'கேஸ் கௌண்டரில் ஒரு 'சிட்டா' இருக்கும் அதை எடுத்துக்கிட்டு வான்னார். அடுத்த பத்தாவது நிமிடம் நான் அந்த 'சிட்டா' உடன் ஆபீசுக்குள் நுழைந்தபோது அந்த ஆபீஸர் 32-ம் தெரிய 'சரி! நாளைக்கு தம்பிய அனுப்பி வையுங்க. 'முத்திரை' குத்தி வைக்கிறேன்னார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. வெளியே வந்ததும் முதலாளி சொன்னார்: நான் 'கணக்கு' பண்ணிட்டேன்.

—லேனாவாணன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இந்தியா- போக்குவரத்து நரகம்



அயல்நாடுகளிலிருந்து வரும் நண்பர்கள் போக்குவரத்தில் இந்தியா ஒரு நரகம் என்று பலர் சொல்வதையும் முறையிடுவதையும் நான் பலமுறை கேட்டிருக்கிறேன். சென்னையில் ஓடுகின்ற கார்களின் எண்ணிக்கையைவிடப் பலமடங்கு கூடுதலாகக் கார்கள் ஓடும் நியூயார்க்கிலும், பாரிசிலும், பிராங்பர்டிலும் இன்ன பிற நகரங்களிலும் ஆண்டு பூராவும் கார் ஓட்டும் நண்பர்கள் இந்தியாவில் கார் ஓட்ட அஞ்சுவானேன்?

சாலை விதிகள் வண்டி ஓட்டுநர்களால் பின்பற்றப்படுவதே இல்லை. சாலைவிதிகள் சென்னையில் அவமானப் படுத்தப் படுகின்றன. 7 கி.மீ வேகத்தில் போய்க் கொண்டிருக்கும் லாரி நடுவீதியில் போய்க் கொண்டிருக்கும். 50 கி.மீ க்கு மேல் மருத்துவமனைக்குப் பறந்து கொண்டிருக்கும் ஆம்புலன்சு லாரியை முந்த முடியாமல் அதற்குப் பின்னால் தவித்துக் கொண்டிருக்கும். இதனால் கடக்கவே கூடாது என்று உலகமனைத்தும் ஒப்புக் கொண்டிருக்கும் மஞ்சள் கோடு கடக்கப் படும்.

தொடக்கம், நடுநிலை, மேல்நிலை, கல்லூரி என்று ஒவ்வொரு கட்டத்திலும் சாலையைப் பற்றிய விதிகள், குறியீடுகளுக்கான விளக்கங்கள் ஐரோப்பிய நாடுகளில் போதிக்கப் படுகின்றன. இங்கே போதிக்கப்படுவதே கிடையாது. ஈரோ. அமெரிக்கா, பிரெஞ்சு, ஆப்பிரிக்கா, சிங்கப்பூர் முதலான தென்கிழக்காசிய நாடுகளில் ஓட்டுநர் பயிற்சிக்கென்ற தனிப்பள்ளிகள் அமைக்கப்பட்டு இயங்குகின்றன. சாலை விதி முறை பற்றி எழுத்து முறைத் தேர்வு தனியாகவும் வண்டி ஓட்டுவது பற்றிய செய்முறைத் தேர்வு தனியாகவும் முறைப்படி வயது வந்தவர்க்கு மட்டும் நடத்தப்படுகின்றன. இங்கே காசு கொடுத்தால் ஓட்டுநர் பயிற்சிக்கான சான்றிதழை முறைகேடான வழியில

FREE E - BOOKS , www.thamizham.net.,

பெற்றுவிட முடியும்.

ஐரோப்பிய வீதிகளில் வண்டிகளே ஓடாத நள்ளிரவில் கூடச் சிவப்பு விளக்குக்கு உரிய மரியாதை நல்கப்பட்டுப் பச்சை வண்ணம் வந்த பிறகே வாகனங்கள் நகரும். சாலை அறம் ஒவ்வொரு ஓட்டுநராலும் பொறுப்புணர்ச்சியோடு பின் பற்றப்படுகிறது. இங்கே சிவப்பு வண்ணம் இருக்கும் போதே பச்சை வண்ண வாகனப் பாதையைப் பாதிக்கு மேலாக அடைத்துக் கொண்டு 'தயாராக இரு' என்ற பொருளுக்குரிய ஆரஞ்சு வண்ணம் வரும் பொழுதே வாகனங்கள் குறுக்கிட்டுப் பாயும் கொடுமையைச் சென்னை வீதியில் காணலாம். போலீசாருக்கு முன்பாகவே சிக்னல்கள் புறக்கணிக்கப்படு வதும், எப்போதேனும் சொரணை உள்ள போலீசார் பிடித்து விட்டால் அவர் கையில் காசைத் திணித்து விட்டு ஓடுவதும் இந்நாட்டு வாகன ஓட்டிகளின் பழக்கங்கள்.

வாகனங்கள் பறக்கும் சாலையைக் கடந்து செல்லக் காத்திருப்பதைத் தவிர்த்துச் சுரங்கப் பாதைகளில் இறங்கிக் கடத்தல் வெளிநாட்டார் வழக்கம். சென்னையில் மக்கள் வரிப்பணத்தில் கட்டப்பட்ட சுரங்கப் பாதை புறக்கணிக்கப் பட்டு வாகனங்கள் செல்வதற்கு இடையூறாக மக்கள் கூட்டம் கூட்டமாகக் கடந்து செல்வதைப் பார்க்கலாம். சுரங்கப் பாதைகள் பிச்சைக்காரர்களின் இருப்பிடமாகவும் சமூக விரோதக் கும்பலின் வாழ்விடங்களாகவும் ஆகிவிட்டன.

சாலையின் இருமருங்கே உள்ள நடைபாதைகளில் கூட இடம், வலம் என வழிகள் பின்பற்றப்பட்டுப் போவோரெல்லாம் வலப்புறத்து நடைபாதையிலும் வருவோரெல்லாம் இடப்புறத்து நடைபாதையிலும் ஒருவரை ஒருவர் எதிர்கொண்டு முட்டி மோதாமல் சாரிசாரியாகப் போவதையும் வருவதையும் கண்குளிர அயல்நாடுகளில் காணலாம். இங்கே நடைபாதை கள் கடைகளுக்கு ஒதுக்கப்பட்டு வாகனங்கள் ஓடுவதற்குரிய சாலைகளில் குறுக்கும் நெடுக்குமாக இடித்து ஓடி மக்கள் செல் வதைச் சென்னை நகரத்து எல்லா வீதிகளிலும் பார்க்கலாம்.

இங்கே தலைநகரங்களை கூடப் போக்குவரத்து விதிகளைப் புறக்கணிக்கும் கொலை நகரங்களாக மாறி விட்டன. ஆமாம்! இங்கே உள்ள சாலைகள் நரகலோகத்துக்கு இடப்பட்ட பாதை கள்! மரண வாயில் நோக்கி அமைக்கப்பட்ட சாப்பாதைகள்.


—நன்றி பேராசிரியர் க. ப. அறவாணன் : "பயண அனுபவங்களின் பாதை வெளிச்சங்கள்"

FREE E - BOOKS , www.thamizham.net.,

உடல் நிலையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி நமது பாதம் என்பது 3000 ஆண்டுகட்கு முன்பு நாம் கண்டறிந்த உண்மை. இங்கிருந்து இம்மருத்துவ முறை சீனர்வுக்குப் பரவி, இன்று சீனா உலகுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது.

உடல் உறுப்புகளை இயக்கும் எல்லா நரம்புகளும் பாதத்தில் சேர்கின்றன. ஓர் உறுப்பு நோயுறும் போது, நரம்பு முடிப்பாக பாதத்தில் உணர்வூட்டும். கட்டை விரலால் உள் பாதத்தின் பல பகுதிகளை நன்கு அழுத்திக் கொண்டே வரும்போது நோயுற்ற உடல் பகுதியைக் குறிக்கும் நரம்பு சந்திக்கும் இடம் அதிக உணர்வுடன் இருக்கும்; சற்று கூசும். எனவே எந்தப் பகுதியில் நோய் என்று கண்டுபிடிக்கவும், நோயை குணப்படுத்தவும் இம்முறை உதவும்.

படத்தைப் பாருங்கள். குறிப்பிட்ட இடத்தை நீங்களே நன்கு அழுத்தி மசாஜ் செய்க. இரு பாதங்களில் எந்த ஒன்றிலும் பலன் உண்டு. பழக்கமில்லாதோர் செய்தாலும் தாறுமாறாக எதுவும் ஆகிவிடாது. ஆபத்தில்லாத எளிய மருத்துவம் சிறப்பாக சுரப்பிகள், குடல் வால், வயிறு, பாலியல் உறுப்புகள் சம்மந்தப்பட்ட தொல்லைகளுக்கு நல்ல நிவாரணம் கிடைக்கும்.




—சித்தன்

# ஏஜெண்டுகள் தேவை

தரமான
"தாஜ்மஹால்"
சுகந்த சுபாரி
பாக்குத்தூள்
விற்பனை செய்ய
முன் பணம்
கட்டும்
ஏஜெண்டுகள்
தமிழகமெங்கும்
தேவை!


விபரங்களுக்கு:

**M/s லக்ஷ்மி கல்யாண்**

**ஏஜென்சீஸ்**

19, ஜானி ஜான் கான் ரோடு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
போன்: 846382.


இருட்டில் தொலைந்த
இந்தியாவைத் தேடி
இளைஞர் கூட்டம்
புகுந்தது திரையரங்குகளில்.



## கலப்பு மணம்

எங்கள்
கிராமத்தில் கூட
கலப்புத்திருமணத்திற்கு
மகத்தான ஆதரவு
இதோ
அரச மரத்திற்கும்
வேப்ப மரத்திற்கும்
திருமணம்
நடந்தேறுகிறது.

—ம.கி. ராஜேந்திரன்



FREE E - BOOKS , www.thamizham.net.,


மாணவர்: இந்தியர்களிடம் நீங்கள் கண்ட சிறப்பு எது?

ஜப்பானியப் பெண்மணி: நீங்கள் எருமை மாடுகளை மிக அதிகமாக நேசிக்கிறீர்கள்.

மாணவர்: எப்படி அதைக் கண்டு பிடித்தீர்கள்?

ஜ பெண்மணி: காரில் சாலைகளில் வரும்போது அங்கங்கே குறுக்கும் நெடுக்குமாக மெதுவாக நடந்து செல்லும் எருமை மாடுகளைப் பார்த்து அறிந்தோம்.

அண்மையில் சென்னை இலயோலா கல்லூரியில் மாணவர், ஜப்பானியர் நேருக்கு நேர் சந்திப்பில் நிகழ்ந்த உரையாடலின் ஒரு பகுதி.



FREE E - BOOKS , www.thamizham.net.,

## சுட்டி சந்தா

சுட்டி சந்தா: 12 இதழ்கள் அஞ்சலில் பெற ரூ 7.00 பணவிடை செய்யுங்கள்.

## சுட்டி முகவரி

எல்லாத் தொடர்புகளுக்கும்: "சுட்டி"
1494, அண்ணாநகர், சென்னை 600 040

## முன் இதழ்கள்

சுட்டி முன் இதழ்கள் எண்: 1 முதல் 28 30 54 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். 50 வது இதழ் 0.75 காசு மற்ற இதழுக்கு 45 காசு வீதம் அஞ்சல் தலை/பணவிடை அனுப்பினால் அஞ்சலில் உங்களுக்கு வந்து சேரும்.

## சுட்டி இலவசம்

சுட்டி இலவசம்: சுட்டியைக் கேள்விப் படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.


## சுட்டி வரவில்லை

சுட்டி ஒழுங்காக வந்து சேருவதில்லை என்று சில சந்தாதாரர்கள் மௌனமாகக் குறைபட்டுப் பயனில்லை. என்ன முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாதிருக்கிறது. சந்தா முடிய காலமிருந்தும் 15 ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெற சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.

FREE E - BOOKS , www.thamizham.net.,

சுடர்: மலர் 8 இதழ் 1 JUNE 1985 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-50

http://www.thamizham.net FREE E - BOOKS (TAMIL)



# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District

FREE E - BOOKS , www.thamizham.net.,